சென்னை கிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் புரசை ஜீ.தாமோதரன் தலைமையில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் அவர்களின் திரைப் பட வசனம் ஒப்பிதல் போட்டி நடைபெற்றது. நிகழ்சியில் இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே சேகர் பாபு முன்னிலையில் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ்,ஊட்க துறை மாநில இணை செயலாளர் தமிழன் பிரசன்னா, பகுதி செயலாளர்கள் சொ.வேலு வி.சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள் புனிதவதி எத்திராசன், பரிதி இளம்சுருதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், எல். சுந்தரராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ். எம்.நாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ், கோ.மணி, நிர்மலா தேவி, கா.நந்தீஸ்வரன், க.வினோத்.கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகள் சேப்பாக்கம் ராஜி,கவிஞர் நன்மாறன், இந்திரஜித்,பாண்டு ரங்கன்,எம். ஜி.செல்வம், கணல் கங்கா,துளசி, குருபரன், அன்புசெல்வம், ராமமூர்த்தி, மோகன்ராஜ், ராமச்சந்திரன்,இளம் முருகு மற்றும் வட்ட கழக செயலாளர்கள் வி. அபாய்,டி.தயாளன், நா.பாலு,சி.சேகர்,ஆர். எம்.ரங்கநாதன்,வி. விஜயகுமார்,ஆர்.பாபு,இ. மொய்தீன்,டால்பின் ஹாரி,வான்மதி கதிரவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 78வது வட்ட கழக செயலாளர் சு.மனோகர் நன்றி கூறினார்.

நமது முதல்வர் மனிதநேயம் உள்ள முதல்வராகத் திகழ்கிறார்!

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் புகழாரம்

சிவகங்கை, அக்.18-

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி தருமை கயிலை மேல்நிலைப் பள்ளி,பிரான் மலை பாரி வள்ளல் மேல்நிலைப் பள்ளிகளில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி தேவகோட்டை கோட்டாட்சியர் பால்துரை தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முதல்வரின் விலை இல்லா மிதிவண்டி களை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்த தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசியதாவது:-

தமிழகத்தில் மக்கள் ஆட்சி நடைபெற்று கொண்டிருக்கிறது. தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு மக்கள் நலத்திட்டங் களை நிறைவேற்றி வருகிறார். குன்றக்குடி,யில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர்கள் படிப்பதற்கான ஒரு புதிய வகுப்பறைதேவை என்ற கோரிக்கையினை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சரிடம் கோரிக்கை வைக்கப் பட்டது.

அதை உடனடியாக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நிறைவேற்றி தந்தார். பிரான்மலையில் கூடுதல் வகுப்பறை கட்டிடம், நாடக மேடை போன்றவற்றினை நிறைவேற்றி னார். தொகுதிக்கு பல்வேறு அரசு நலத்திட்டங்களை தொடர்ந்து செயல் படுத்தி வருகிறார். மக்கள் நல பணிகளில் அக்கறையுடன் செயல் பட்டு வருகிறார். மக்களை சென்று சந்திக்க வேண்டும் என்று விரும்பி அவருக்குள்ள பணியின் சுமையினை பொருட்படுத்தாமல் நேரம் ஒதுக்கி தொகுதியில் வலம் வந்து கொண்டிருக்கிறார்.

சிறிய, பெரிய நிகழ்ச்சி என்று பாராமல் மக்களை இதன் வாயிலாக நேரில் சந்திக்க விரும்பி இத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது பாராட்டுக்குரியதாகும்.

முதல்வர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் அறநிலையத் துறை அமைச்சராக சிறப்பாக பணியாற்றினார். தந்தை பெரியார், முதல்வர் கலைஞரின்மனதில் முள்ளாக இருந்த அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற உன்னத திட்டத்தை நிறைவேற்றினார். அவர்கள் முறையாக பயிற்சி பெறும் வகையில் பயிற்சி பள்ளிகளை ஏற்படுத்தினார். பாழடைந்திருந்த கோவில்களை சீரமைத்து குடமுழுக்கு நடத்தினார். தற்போது தொகுதி முழுவதும் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். ராமேஸ்வரத்தில் ஏழை படகோட்டியின் மகனாக பிறந்த அப்துல் கலாம் பெரிய விஞ்ஞானியாக திகழ்ந்தார். நாட்டின் ஏவுகணையை தயாரித்தார். முதல்குடிமகன் என்று அழைக்கப்படும் நாட்டின் குடியரசு தலைவராக சிறப்பாக திறமையுடன் பணியாற்றினார். அவரது பணியினை உலகமே பாராட்டியது. அவருடைய சிலையை அண்ணா பல்கலைக் கழகத்தில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் தமிழக முதல்வர் திறந்து வைத்து சிறப்பு செய்துள்ளார்.

அவர் தனது வாழ்நாளில் பல்வேறு சாதனைகள் செய்திருந்தாலும் கால்ஊனம் அடைந்த மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை காலைமிகவும் எளிமையான முறையில் செய்திட வேண்டும் என்று திட்டமிட்டு அதை செய்துமுடித்தார். உலக அளவில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி இருந்தாலும் ஊனமுற்றவர்களுக்கு செயற்கைகோள் தயாரித்ததை வாழ்நாள் சாதனையாக கருதிய தாக கூறினார் அவரை அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள் மிகவும் பாராட்டினார். தற்பொழுது சந்திரயான். 3 திட்டத்தினை உருவாக்கிய விஞ்ஞானி தமிழக விஞ்ஞானி ஆவார். தமிழகத்தில் அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்கள் விஞ்ஞானிகளாக உயர் பதவிக்கு வர வேண்டும். அதைத்தான் தமிழக முதல்வர்அவர்கள் கல்விக்காக பல்வேறு பணிகளை செயல்படுத்தி வருகிறார். அவர் விருப்பத்தினை நீங்கள் நிறைவேற்றும் வகையில் முன்னேற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். முதல்வர் தலைமையில் மனிதநேயமிக்க ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசினார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக மருத்துவ அணி மாவட்ட அமைப்பாளர் வில்சன் நிழலவழகன் ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் மாவட்ட கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும், டி.ஜெ.கோவிந்தராஜன், தலைமையில், மாநில அயலக அணி தலைவர் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராஸ்வாமி எம்.பி முன்னிலையில் மருத்துவ முகமை நடைபெற்றது. முகாமில் காசநோய் பரிசோதனை, சர்க்கரை நோய், பரிசோதனை, ரத்த அழுத்தம் மற்றும் தமிழக அரசின் மருத்துவ காப்பிடு விண்ணப்பித்து தருவது உள்ளிட்டவை நடைபெற்றது. நிகழ்ச்சியில் மு.பகலவன், , எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள், டி.கே.சந்திரசேகர், ஜான் (எ) பொன்னுசாமி, வி.பி ரவிக்குமார் இரா.அறிவழகன், பி.முத்து, க.சு. தமிழ்உதயன், அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ், வெற்றி (எ) ராஜேஷ், , மு.பாஸ்கரன் மருத்துவர் எ. பாலமுருகன். ஆர்.சம்சினி, பார்த்திபன், எஸ்.கார்த்திகேயபிரசாத், சுஜிதா, எஸ்.சாந்தகுமார், அஜய் குமார் ராமதாஸ், ஆண்டவன் ஆகாஷ், அன்புசெல்வன், ரியாஸ் அஹமத், மாணவரணி டி.ஜெ.ஜி.தமிழரசன், எம். கேசவன் பங்கேற்றனர்.

பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் பிறந்தநாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக். 18 -

பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் மகிழ்ச்சியுடனும் நல்ல ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர், கடம்பத்தூர், திருவாலங்காடு மற்றும் பூண்டி வட்டாரத்தில் உள்ள கர்ப்பிணி, தாய்மார்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் சார்பில் சமூக வளைகாப்பு விழா திருவள்ளூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்துகொண்டு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சீர்வரிசைகளை வழங்கினார். அருகில் மாவட்ட திட்ட அலுவலர் எஸ். கே.லலிதா, நகர மன்ற தலைவர் உதயமலர்பாண்டியம், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெனிபர் கிரேஸ், ராஜேஸ்வரி, மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், ஒன்றிய நகர செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், கே.ஹரிகிருஷ்ணணன், ஆர்.ஜெயசீலன், ஒன்றிய குழு தலைவர்கள் சரஸ்வதி ரமேஷ், மகாலட்சுமிமோதிலால், மாவட்ட கவுன்சிலர்கள் சரஸ்வதி சந்திரசேகர், சிவசங்கரி உதயகுமார், விஜயகுமாரி சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சிவகுமார், நகர் மன்ற உறுப்பினர் இந்திரா பரசுராமன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு 57க்குட்பட்ட டேவிட்சன் சாலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் துணை மின் நிலையம் மற்றும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் நீரேற்று நிலையம் அமைப்பதற்கான இடத்தினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (17.10.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், , தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழக இணை மேலாண்மை இயக்குநர் விஷ் மஹாஜன், , வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம்.சிவகுரு பிரபாகரன், மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு உட்பட அலுவலர்கள் உடனிருந்தனர்.

விருதுநகர் மாவட்டத்தில் - தனியார் பட்டாசு ஆலைகளில் தீ விபத்து!

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.18-

விருதுநகர் மாவட்டத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலைகளில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள், நேற்று இதுகுறித்து வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், மாரனேரி கிராமம், கிச்சநாயக்கன்பட்டி மற்றும் சிவகாசி வட்டம், மங்களம் கிராமம் ஆகிய இரு வேறு இடங்களில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலைகளில் இன்று (17-10-2023) எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீவிபத்தில் 11 பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் படுகாயமடைந்து ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தின ருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தி.மு.க. விவசாய அணி

கோவை மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட (ம) மாநகர தலைவர், துணைத் தலைவர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மாவட்டந்தோறும் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினை தி.மு.க. விவசாய அணி கொண்டாடவிருப்பதையொட்டி, அது குறித்து கலந்தாலோசிக்க,

கோவை மண்டலத்திற்குட்பட்ட "தி.மு.க. விவசாய அணி மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்" தி.மு.க. விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி, தி.மு.க. விவசாய அணி துணைத் தலைவர் இரா.தமிழ்மணி, தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர்கள் கள்ளிப்பட்டி மணி, குறிஞ்சி என்.சிவகுமார், எல்.பி.தர்மலிங்கம், ஆகியோர் தலைமையில், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி, தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தி.மு.க. ஆதிதிராவிட நலக்குழு துணைத் தலைவர் அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன், தி.மு.க. மகளிர் அணி துணைச் செயலாளர் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், ஆகியோர் சிறப்புரையாற்றிட 26.10.2023 (வியாழக்கிழமை), காலை 11. 00 மணியளவில் வால்பாறை, காமராஜர் நகர், எண். 8/258, குட் லக் விடுதியில் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணியின் மாவட்ட (ம) மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 600 018.
நாள்: 17-10 - 2023.

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

குமாரபாளையம் நகர முன்னாள் செயலாளர் தி.கு.சண்முகம் மறைவு!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை,அக்.18-

நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் நகரக் கழக முன்னாள் செயலாளரும், குமாரபாளையம் பேரூர்க் கழக முன்னாள் செயலாளரும், பள்ளிப் பாளையம் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும், ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட க் கழக முன்னாள் துணைச் செயலாளருமான தி.கு.ச. என்கிற தி.கு. சண்முகம் அவர்கள் நேற்று (17.10.2023) இயற்கை எழுதினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

குமாரபாளையம் நகரக் கழக முன்னோடி தி.கு.சண்முகம் மறைவு!

அமைச்சர் மா.மதிவேந்தன் - எஸ்.எம்.மதுரா செந்தில் அஞ்சலி!

நாமக்கல், அக்.18 -

குமாரபாளையம் கழக முன்னோடி தி.கு.ச (எ) தி.கு.சண்முகம் அவர்கள் நேற்று (17.10.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த சண்முகம் உடலுக்கு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த சண்முகம் 1965 முதல் 1972 வரை குமாரபாளையம் பேரூர் கழக செயலாளர், 1972 முதல் 1979 வரை பள்ளிபாளையம் ஒன்றிய கழக செயலாளர், 1979 முதல் 1983வரை குமாரபாளையம் நகரக் கழக செயலாளர், 1983 முதல் 1997 வரை ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட தி.மு.க. துணை செயலாளர், 2004 முதல் 2009 வரை ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட தி.மு.க. துணை செயலாளர், 1996 ல் குமாரபாளை யம் நகர கூட்டுறவு வங்கி தலைவர், 2004 முதல 2009 வரை ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட அவை தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஒரத்தநாடு மு.காந்தி
அக்டோபர் 18 (2020)

இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஒன்றிய துணைச்செயலாளர் என படிப்படியாக பொறுப்பு வகித்து 2014 முதல் தனது இறுதிகாலம் வரை ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

புதூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – ஒரத்தநாடு ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

"கொம்பு சீவி விட்ட காளை போல் சீறிப் பாய்ந்து கழகப் பணியாற்றியதால், கழகத் தொண்டர்களின் பேரன்பைப் பெற்றவராக திகழ்ந்தார்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.